

திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி செயலாளர்/ இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.11.2023) தனது 46ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் உட்பட பலர் உள்ளனர்.




சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் "மனித நேய உதய நாளாக கொண்டாடப்படுவதை முன்னிட்டு வேப்பேரி, பெரியார் திடலில் நடைபெற்ற விழாவில் கழக மூத்த முன்னோடிகள் 500 நபர்களுக்கு புத்தாடைகள் மற்றும் பொற்கிழிகளையும், 500 மாணவ, மாணவியருக்கு கல்வி ஊக்கத்தொகை மற்றும் கல்வி உபகரணங்களையும் கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, அ.வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல், இ.பரந்தாமன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி.லோகேஷ், எழும்பூர் பகுதிக் கழக செயலாளர்கள் வி.சுதாகர். சொ.வேலு.எம்.சி, மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### காக்களூர் பைபாஸ் சாலையில் ரூ.9 கோடி மதிப்பீட்டில்

# மழை நீர் வடிகால்வாய் - ஃபேவர் பிளாக் அமைக்கும் பணிகள்!

### ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

*திருவள்ளூர், நவ.28-*

*திருவள்ளூர் நகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் 2 லட்சத்திற்கு அதிகமானோர் வசித்து வருகின்றனர். திருவள்ளூர் நகரின் மையப்பகுதியில், காக்களூர் ஊராட்சியை இணைக்கும் இடத்தில் காக்களூர் ஏரி உள்ளது. இது 194 ஏக்கரில் 2682 மீட்டர் நீளம் வரையிலான நான்கு மதகுகள் இரண்டு கலங்கள்கள் கொண்ட மிகப்பெரிய ஏரி ஆகும். இந்த ஏரியில் 15 மில்லியன் கன அடி நீரை சேமித்து வைக்க முடியும். இதனால் கடந்த காலங்களில் காக்களூர் மற்றும் சுற்று வட்டார விவசாயிகளுக்கு இந்த ஏரியில் இருந்து தண்ணீர் அனுப்பப்பட்டும் வந்தது.*

*அதே நேரத்தில் இந்த ஏரியை சுற்றுலா தலமாக்கும் வகையில் இந்த பகுதியை தூய்மையாக்கி பொது மக்களுக்கு பொழுதுபோக்கு இடமாகவும் நடைபாதை அமைத்து ஏரியில் படகு போக்குவரத்து ஏற்படுத்த வேண்டும் என கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக இயற்கை ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.*

*இந்நிலையில் தமிழ்நாடு அரசின் உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் சென்னை திருத்தணி ரேணிகுண்டா சாலையான காக்களூர் பைபாஸ் சாலையில் மழை நீர் வடிகால்வாய் மற்றும் ஏரியை சுற்றி பொது மக்களின் வசதிக்காக ஃபேவர் பிளாக் அமைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.*

*இந்த காக்களூர் பைபாஸ் அலையானது சென்னையிலிருந்து ஆவடி வழியாக திருவள்ளூரை இணைக்கும் முக்கிய சாலையாக உள்ளது. மழைக்காலங்களில் மழை நீர் சாலைகளில் தேங்காமல் இருக்கவும், மழை நீர் வீணாக குடியிருப்புகளில் புகுவதை தடுப்பதற்காகவும் இந்த திட்டத்தை செயல்படுத்த பொது மக்கள் கோரிக்கை வைத்திருந்தனர்.*

*இதனையடுத்து பொது மக்களின் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு அரசின் உத்தரவுக்கு ஏற்ப ரூ.10 கோடி மதிப்பீட்டில் மழை நீர் வடிகால்வாய் மற்றும் ஃபேவர் பிளாக் அமைக்கும் பணிக்கான பூமி பூஜை விழா நடைபெற்றது.*

*இந்த விழாவற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன், ஒன்றிய கவுன்சிலரும், பொதுக்குழு உறுப்பினருமான த.எத்திராஜ் முன்னிலை வகித்தார். நெடுஞ்சாலைத் துறை உதவி கோட்டப் பொறியாளர் தெஸ்நாவிஸ் பெர்னாண்டோ, உதவி பொறியாளர் விழாவில் பிரசாந்த் ஆகியோர் வரவேற்றனர். இந்த விழாவில் பூந்தமல்லி தொகுதி எம்எல்ஏ ஆ.கிருஷ்ணசாமி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பூமி பூஜை போட்டு பணிகளை தொடங்கி வைத்தார்.*

*காக்களூர் பைபாஸ் சாலையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் சாலையின் இருபுறமும் 1900 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாயும், ஃபேவர் பிளாக் அமைக்கப்பட உள்ளதாகவும், வரும் மார்ச் மாதத்திற்குள் கட்டுமானப்பணிகள் முடிந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என எம்எல்ஏ., ஆ.கிருஷ்ணசாமி தெரிவித்தார்.*

### தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்

## காரைக்குடி மண்டல தொ.மு.ச. கவனத்திற்கு!

### தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் 15வது ஊதிய உயர்வு ஒப்பந்த பேச்சுவார்த்தை மற்றும் இதர பிரச்சினைகள் குறித்து போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடன் தொடர்ந்து பேசி வருகின்றோம். இந்தச் சூழ்நிலையில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. காரைக்குடி மண்டல தொ.மு.ச. பொதுச்செயலாளர் மா.பச்சமால் உண்ணாவிரதம் என்று அறிவித்திருப்பது ஏற்புடையது அல்ல.

எனவே, தொழிலாளர்கள் யாரும் உண்ணா விரதத்தில் பங்கேற்க வேண்டாம் எனவும், தொ.மு.ச. பேரவை பேச்சுவார்த்தை மூலம் அனைத்து பிரச்சினைகளையும் சுமூகமாக முடித்துக் கொடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இடம் : கலைஞரகம்
நாள்: 27.11.2023

**மு.சண்முகம் எம்.பி.,**
பொதுச் செயலாளர்
தொ.மு.ச. பேரவை



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ். ஹரிபாபு, தலைமையிலும் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா. துரைராஜ் முன்னிலையில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆர்.ஜாரு ஆனந்த, வெ.புருஷோத்தமன், எஸ்.ரவீந்திரகுமார், ஒ.சுந்தரம், ப.பாலமுருகன், பா.குமரன், ஆ.மகாதேவன், ஸ்ரீதர், ஆர்.சுரேஷ், என்.கமலக்கண்ணன், பூ.ஜெயவேல், எம்.எஸ்.கார்த்திக், எஸ்.மாரிமுத்து, என்.மணிவண்ணன், சே.அருண், கே.நாராயணன் வரவேற்பில் மாணவர்களுக்கான மாவட்ட அளவில் கவிதை மற்றும் வசனம் ஒப்புவித்தல் போட்டியில் வென்ற மாணவ மாணவிகளுக்கு முதல் பரிசு ரூ.7000, இரண்டாம் பரிசு ரூ.4000, மூன்றாம் பரிசு ரூ.3000, போட்டியில் கலந்துகொண்டு 22 மாணவ மாணவிகளுக்கு தலா ரூ.1000 அமைச்சர் மா.சுப்ரமணியன் சிறப்புரையாற்றி வழங்கினார். மாநில செயலாளர் இறையன்பன் குத்தூஸ், மாநில துணைச் செயலாளர் கவிஞர் நன்மாறன், பொதுக்குழு உறுப்பினர் சைதை மா.அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள்:

# எழும்பூர் தொகுதியில் 12 தொடர் நிகழ்ச்சிகள் - இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., ஏற்பாடு!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் பங்கேற்பு!

இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 46ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் விதமாக, எழும்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும், கழக சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில் எழும்பூர் தொகுதியில் 28.11.2023 தொடங்கி 12 தொடர் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் 46 குழந்தைகளுக்குத் தங்க மோதிரம், பரிசுப் பொருட்களை அளித்தல், அறுசுவை உணவு, மளிகைப் பொருட்கள், வேட்டி, சேலை, புத்தகப் பை உள்ளிட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் மகளிருக்கான சிறப்பு மருத்துவ முகாம், இரத்த தான முகாம், கால் பந்தாட்டப் போட்டி ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுகள் அனைத்திலும் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும் இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு மற்றும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் கலந்துகொண்டு உதவிப் பொருட்களை வழங்கிச் சிறப்பிக்க உள்ளனர்.

**முதல் நாள் நிகழ்வாக, 28.11.2023** அன்று எழும்பூர் தொகுதி, 58அ வட்டம், பாந்தியன் சாலையில் அமைந்துள்ள அரசு தாய்சேய் நல மருத்துவமனையில் 27.11.2023 அன்று பிறந்த 46 குழந்தைகளுக்கு தங்க மோதிரமும் பரிசுப் பொருட்களும் வழங்கப்படும். இந்நிகழ்விற்கு அவைத் தலைவர் வெ.மருதன் தலைமை வகிக்க, எழும்பூர் தெற்குப் பகுதிச் செயலாளர் வி.சுதாகர், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி அமைப்பாளர் சே.பாலாஜி, 58அ வட்டச் செயலாளர் ஆர்.பாபு, 58அ வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.ரஞ்சித்குமார், 58அ வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எல்.சுகுமாரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

**இரண்டாம் நிகழ்வாக, 30.11.2023** அன்று எழும்பூர் தொகுதி, 78வது வட்டம், குயப்பேட்டை, நியூ மாணிக்கம் தெருவில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிப் பள்ளி ஆதரவற்றோர் இல்லத்தில் தங்கியுள்ள மாணவமாணவியருக்கு அறுசுவை மதிய உணவு மற்றும் மளிகைப் பொருட்கள் வழங்கப்படுகிறது. இந்நிகழ்விற்கு கழக வழக்கறிஞர் நேரு பிரபாகரன் தலைமை வகிக்க, எழும்பூர் வடக்குப் பகுதிச் செயலாளரும் மாமன்ற நிலைக்குழு உறுப்பினருமான சொ.வேலு, எம்.சி., 78வது வட்டச் செயலாளர் சு.மனோகரன், வட்ட இளைஞரணி அமைப்பாளர் இ.பி.கார்த்திக், தலைமைக் கழகப் பேச்சாளர் சூளை நேரு, மகளிரணி பகுதி துணை அமைப்பாளர் புஷ்பலதா நேரு, முன்னாள் பகுதிப் பிரதிநிதி வி.நாகராஜ், கழகப் பேச்சாளர் ஜெ.கருணாகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

**மூன்றாம் நிகழ்வாக, 02.12.2023** அன்று, எழும்பூர் தொகுதி, 77அ வட்டம், புளியந்தோப்பு, சிவராஜபுரம் மெயின் ரோடு பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் 460 பேருக்கு சேலை, வேட்டி, சட்டை வழங்கப்படுகிறது. இந்நிகழ்விற்கு மாவட்டப் பிரதிநிதி மா.காந்தி தலைமை வகிக்க, எழும்பூர் வடக்குப் பகுதிச் செயலாளரும் மாமன்ற நிலைக்குழு உறுப்பினருமான சொ.வேலு, எம்.சி., 77அ வட்டச் செயலாளர் வி.அபாய், 77அ வட்டத் துணைச் செயலாளர் ஆர்.ஆரோக்கியம், 58அ வட்டப் பகுதி பிரதிநிதி ஈ.காளிதாஸ், 58அ வட்டப் பகுதி பிரதிநிதி பி.தஸ்தகீர்கான், 58அ வட்ட இளைஞரணி அமைப்பாளர் யாசர் அராபத் மற்றும் மா.கார்த்திகேயன், ஜி.கோமகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

**நான்காம் நிகழ்வாக, 04.12.2023** அன்று, எழும்பூர் தொகுதி, 108வது வட்டம், சேத்துப்பட்டு, மெக்நிக்கல்ஸ் சாலையில் அமைந்துள்ள சர்வோதயா மாணவிகள் ஆதரவற்றோர் இல்லத்தில் தங்கியிருக்கும் மாணவிகளுக்கு இரவு உணவு மற்றும் மளிகைப் பொருட்கள் வழங்கப்படுகிறது. இந்நிகழ்விற்கு எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் ரா.வெற்றிவேல், 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர். எழும்பூர் தெற்குப் பகுதிச் செயலாளர் வி.சுதாகர், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி அமைப்பாளர் சே.பாலாஜி, 108வது வட்டச் செயலாளர் வான்மதி கதிரவன், 108வது வட்ட மாமன்ற உறுப்பினர் எல்.சுந்தர்ராஜன், 108வது வட்ட இளைஞரணி அமைப்பாளர் ரா.கார்த்திக், 108வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ், 108வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ரா.விக்னேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

**ஐந்தாம் நிகழ்வாக, 06.12.2023** அன்று, எழும்பூர் தொகுதி, 61வது வட்டம், எழும்பூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள டாக்டர் சாரதா நிச்சானி மருத்துவமனையில் இரத்த தான முகாம் நடைபெறவிருக்கிறது. இம்முகாமில் சேகரிக்கப்படும் இரத்தம் எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு வழங்கப்படும். இந்நிகழ்விற்கு எழும்பூர் சி.ரமேஷ் தலைமை வகிக்க, எழும்பூர் தெற்குப் பகுதிச் செயலாளர் வி.சுதாகர், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி அமைப்பாளர் சே.பாலாஜி, 61வது வட்டச் செயலாளர் டால்பின் எஸ்.அரி, மாவட்டப் பிரதிநிதி ஏ.கே.ரஃபிக், எழும்பூர் தெற்குப் பகுதி மாணவர் அணி அமைப்பாளர் ஆர்.ஓம்பிரகாஷ், 61வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆகாஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

**ஆறாம் நிகழ்வாக, 08.12.2023** அன்று, எழும்பூர் தொகுதி, 99வது வட்டம், புரசைவாக்கம், சுந்தரம் பிள்ளை தெருவைச் சேர்ந்த பொதுமக்கள் 460 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. இந்நிகழ்விற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் யு.விஜயபோஸ் தலைமை வகிக்க, எழும்பூர் வடக்குப் பகுதிச் செயலாளரும் மாமன்ற நிலைக்குழு உறுப்பினருமான சொ.வேலு, எம்.சி., 99வது வட்டச் செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன், முன்னாள் பகுதி பிரதிநிதி ஏ.அப்பாதுரை, 99வது வட்ட இளைஞரணி அமைப்பாளர் யு.பிரவீன்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

**ஏழாம் நிகழ்வாக, 10.12.2023** அன்று, எழும்பூர் தொகுதி, 77வது வட்டம், டிமலஸ் சாலையில் அமைந்துள்ள கேசவன் பூங்கா நவீன கால்பந்தாட்ட மைதானத்தில் 16 அணிகள் பங்கு பெறும் ஒரு நாள் கால்பந்தாட்டப் போட்டி நடைபெறுகிறது. இந்நிகழ்விற்கு மாவட்டப் பிரதிநிதி மு.கமலக்கண்ணன் தலைமை வகிக்க, எழும்பூர் வடக்குப் பகுதிச் செயலாளரும் மாமன்ற நிலைக்குழு உறுப்பினருமான சொ.வேலு, எம்.சி., 77வது வட்டச் செயலாளர் தி.தயாளன், 77வது வட்ட அவைத் தலைவர் டி.விஸ்வநாதன், 77வது வட்டத் துணைச் செயலாளர் வீ.கே.ரவி, 77வது வட்டப் பகுதி பிரதிநிதிகள் ஏ.யு.மணிவண்ணன், எஸ்.முனுசாமி, மகளிர் அணி பகுதி துணை அமைப்பாளர் எம்.கலா, 77வது வட்ட இளைஞரணி அமைப்பாளர் ஹெச்.நாகேந்திரன், ஆர்.தர்மதுரை, ஏ.கவிதா, சி.சதிஷ், கே.ஜான்சன், ஜி.எஸ்.பிரவின்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

**எட்டாம் நிகழ்வாக, 12.12.2023** அன்று, எழும்பூர் தொகுதி, 58வது வட்டம், புரசைவாக்கம், தாக்கர் தெருவிலுள்ள சரவணா ஸ்டோர் அருகில் பகுதி வாழ் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது. இந்நிகழ்விற்கு தலைமை கழகப் பேச்சாளர் எம்.இ.தேவநிதி தலைமை வகிக்க, எழும்பூர் தெற்குப் பகுதிச் செயலாளர் வி.சுதாகர், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி அமைப்பாளர் சே.பாலாஜி, 58வது வட்டச் செயலாளர் வி.விஜயகுமார், மாவட்டப் பிரதிநிதி அ.நித்தியராஜ், 58வது வட்ட இளைஞரணி அமைப்பாளர் சரண்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

**ஒன்பதாம் நிகழ்வாக, 14.12.2023** அன்று, எழும்பூர் தொகுதி, 61அ வட்டம், புதுப்பேட்டை டிரைவர் தெருவில் அமைந்துள்ள ஆதரவற்றோர் முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோருக்கு உணவும் மளிகைப் பொருட்களும் வழங்கப்படுகிறது. இந்நிகழ்விற்கு 61அ வட்ட முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், 61அ வட்ட முன்னாள் துணைச் செயலாளர் சு.பிரம்மதேவன், பாலாஜி அன்புமணி ஆகியோர் தலைமை வகிக்கின்றனர். எழும்பூர் தெற்குப் பகுதிச் செயலாளர் வி.சுதாகர், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி அமைப்பாளர் சே.பாலாஜி, 61அ வட்டச் செயலாளர் இ.மொய்தீன், 61அ வட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி.சதாம்உசேன், அசினாபேகம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

**பத்தாம் நிகழ்வாக, 16.12.2023** அன்று எழும்பூர் தொகுதி, 99அ வட்டம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, சாஸ்திரி நகரில் மகளிருக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறுகிறது. இந்நிகழ்விற்கு முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார் தலைமை வகிக்க, எழும்பூர் வடக்குப் பகுதிச் செயலாளரும் மாமன்ற நிலைக்குழு உறுப்பினருமான சொ.வேலு, 99அ வட்டச் செயலாளர் சி.சேகர், 99அ வட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி.சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

**பதினோராம் நிகழ்வாக, 18.12.2023** அன்று, எழும்பூர் தொகுதி, 78அ வட்டம், சூளை, டி.கே.தெரு சட்டணன் தெரு சந்திப்பில் பள்ளி மாணவமாணவிகளுக்குப் புத்தகப் பை வழங்கப்படுகிறது. இந்நிகழ்விற்கு 78அ வட்ட முன்னாள் செயலாளர் ஆர்.புருஷோத்தமன் தலைமை வகிக்கிறார். எழும்பூர் வடக்குப் பகுதிச் செயலாளரும் மாமன்ற நிலைக்குழு உறுப்பினருமான சொ.வேலு, 78அ வட்டச் செயலாளர் ந.பாலு, 78அ வட்டப் பகுதி பிரதிநிதிகள் சி.குணசேகரன், ப.பன்னீர் செல்வம், எழும்பூர் வடக்குப் பகுதி மாணவர் அணி அமைப்பாளர் ப.விஜயகுமார், 78அ வட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.சீனிவாசன், 78அ வட்ட முன்னாள் பொருளாளர் இரா.தாமோதரன், 78அ வட்ட முன்னாள் பகுதி பிரதிநிதி பி.குப்பன், எழும்பூர் வடக்குப் பகுதி முன்னாள் மாணவர் அணி துணை அமைப்பாளர் எல்.நரேஷ்குமார், கே.ஜானகிராமன், எம்.இருமையகுமார், ப.கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

**பன்னிரெண்டாம் நிகழ்வாக, 20.12.2023** அன்று, எழும்பூர் தொகுதி, 108அ வட்டம், சேத்துப்பட்டு, சீனிவாசன் தெருபள்ளிச் சாலை சந்திப்பில் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் 460 பேருக்கு அறுசுவை உணவு (பிரியாணி) வழங்கப்படுகிறது. இந்நிகழ்விற்கு எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் பொருளாளர் ந.கலையரசன் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர். எழும்பூர் தெற்குப் பகுதிச் செயலாளர் வி.சுதாகர், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி அமைப்பாளர் சே.பாலாஜி, 108அ வட்டச் செயலாளரும் மாமன்ற உறுப்பினருமான எல்.சுந்தர்ராஜன், எம்.சி., 108அ வட்டப் பகுதி பிரதிநிதி என்.இளஞ்செழியன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.சிலம்பரசன், 108அ வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்வுகள் அனைத்திலும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள், வட்டச் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.